உலகெலாம் உணர்ந்து வந்து ஓதுகின்ற மந்திரம்
உண்மையை அறிந்து கொள்ள ஈசன் தந்த தந்திரம்
கனவு காணும் அயர்வு நீக்கி காட்டுகின்ற ரூபகம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

அருமையான மனித வாழ்வை வளமையாக்கும் மந்திரம்
ஆசை நீக்கி அன்பு காட்டும் நேசமான சூசகம்
வெறுமையல்ல ஞான மார்க்கம் வேத நாதம் என்றிடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

தாழ்விலாத யோகமோடு தயையை மேலும் ஏற்றிடும்
தூய்மையான எண்ணமோடு துணிவு கூட வந்திடும்
ஏழ்பிறப்பு வினையும் நீக்கி இனிமை நெஞ்சில் சேர்த்திடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

தரும நெறியை கருமத்தோடு கலந்து வைக்க செய்திடும்
ஊசி காதில் ஒட்டகங்கள் உட்புகுந்து வந்திடும்
இருமையல்ல ஒருமை யாவும் என்று காட்டும் போதகம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

மாதவத்து முனிவர் வந்து வாழ்த்துகின்ற அம்பலம்
வாய்மை கொண்ட பக்தரோடு அருணைநகரில் ஊர்வலம்
தீ திறந்து எண்ணம் ஓடி தேவனாக்கும் ஸாதகம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

ராமகாதை கீதையோடு ரமணரிஷியை போற்றிடும்
காய்ந்த நெஞ்சில் அருவிபோல கனிவு உணர பேசிடும்
காமவாதை கள்ள ஞானம் தட்டி தரையில் சாய்த்திடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

தாமசத்தை நீக்கி நம்மை தனியனாக வைத்திடும்
தனியனாக இருந்த போதும் ஞான உறவு சேர்த்திடும்
நேம நிட்டை நாமவேள்வி நித்தம் நித்தம் ஏற்றிடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

வேள்வியாக வாழ்வு மாற தோல்வி என்பதெங்கனம்
கேள்வியான தொல்லை விட்டு விடை கிடைக்கும் நிச்சயம்
ஜீவிதத்தில் அர்த்தம் வந்து செயல் சிறக்க செய்திடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

யோகி நாமம் ராமநாமம் நிதமும்சொல்லத் தோன்றிடும்
வாசி யோகம் நெஞ்சில் கூடி சுடரெழும்பி நின்றிடும்
சுடரெழும்ப அருள் வழிந்து தெய்வ காட்சி தந்திடும்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்

தெய்வ காட்சி கண்டவர்க்கு எந்த நாளும் மங்களம்
தேன்நிலவை தெய்வத்தோடு கண்டவர்க்கு மங்களம்
தேவராக சீடர்களை மாற்றும் குருவும் மங்களம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்